**O.S.No.51/2020**

வா.சா.1, திருமதி.இருளாயி
நாள் : 19.10.2024 நேரம் : 12.00 P.M.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)இந்த வழக்கு எத்தனை சொத்துக்களுக்கு போடப்பட்டுள்ளது என்றால் 2 இடங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கான சர்வே எண் தெரியுமா என்றால் நான் படிக்காததால் எனக்கு சர்வே எண் தெரியாது. சொத்துக்களின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. 1வது லக்க சொத்துக்கு நான்கு மால்கள் என்னவென்றால் எல்லாம் ஒரே சொத்தாகத்தான் உள்ளது. 2லக்க சொத்துக்கும் ஒரே சொத்தாகத்தான் உள்ளது, நாங்கள் இன்னும் பிரிக்கவில்லை. 2 லக்க சொத்துக்களுக்கும் ஒரே நான்கு மால்கள் என்றால் சரிதான். பிராதில் சொத்து விவரத்தில் 2லக்க சொத்துகளுக்கும், நான்கு மால்களில் தட்டச்சு செய்தும், பெரும்பகுதி கையால் எழுதப்பட்டதற்கான காரணங்கள் என்னவென்றால் ஒன்றும் இல்லை.

2)சொத்து உள்ள கிராமம் குமாரக்குறிச்சி என்றால் சரிதான். நான் ஆதனக்குறிச்சியில் வசித்து வருகிறேன். சொத்து உள்ள இடத்திற்கும், நான் வசித்து இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்குமென்றால் சுமார் 8 கி.மீ தூரம் இருக்கும். எனது உடன் பிறந்த சகோதரர் 1ம் வாதி காரைக்குடியில் இருந்து வருகிறார். எனது உடன் பிறந்த சகோதரிகள் தான் 1, 2 பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். எனது தாயார் பெயர் முத்தம்மாள் என்றால் சரிதான். முத்தம்மாளின் உடன் பிறந்த சகோதரி லெட்சுமி என்றால் சரிதான். முத்தம்மாளும், லெட்சுமியும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். லெட்சுமியின் மகள் தான் 3ம் பிரதிவாதி சிவகாளி என்றால் சரிதான்.

3)3ம் பிரதிவாதி சிவகாளியிடம்தான் தாவாசொத்துக்களை குமரவேல் என்பவர் கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். குமரவேல்

தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். குமரவேலின் வாரிசுகள் தான் 4 முதல் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்து உள்ள ஊரில் நாங்கள் குடியிருக்காததாலும், அனுபவிக்காததாலும் நான்கு மால்களை பிராதில் முறையாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.12 P.M

சாட்சியின் கையொப்பம்.